செய்தி வெளியீடு எண் 63 நாள்.31.01.2017

**திருவள்ளூர் மாவட்டம், ஆவடி வட்டம் சத்தியமூர்த்தி நகர் அரசினர் மேல்நிலைப்பள்ளியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பாக, மனிதநேய வார இறுதிவிழா மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

~~~~~

திருவள்ளூர் மாவட்டம், ஆவடி வட்டம் சத்தியமூர்த்தி நகர் அரசினர் மேல்நிலைப்பள்ளியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பாக, மனிதநேய வார இறுதிவிழா மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் 30.01.2017 அன்று நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் 11 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பள்ளிகள், சத்தியமூர்த்தி நகர் அரசினர் மேல்நிலைப்பள்ளிகளைச் சேர்ந்த மாணவ, மாணவிகளும் நடனம், நாடகம், பேச்சு போன்ற பல்வேறு கலை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர்.

மனிதநேய வார விழாவை முன்னிட்டு பல்வேறு பள்ளிகளில் நடத்தப்பட்ட பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, நாடகப்போட்டி போன்ற போட்டிகளில் வெற்றிப்பெற்ற மாணவ மாணவிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பரிசுகளை வழங்கினார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கூறியதாவது “ பள்ளிப் பயிலும் மாணவ மாணவிகள் தங்கள் பள்ளிப் பருவத்திலேயே மனிதநேயம் போன்ற நற்பண்புகளை வளர்த்துக்கொள்ள வேண்டும். இது போன்ற பண்புகள் மாணவர்கள் தங்கள் வாழ்க்கையில் மேன்மை அடைய உதவும் பண்புகளாகும். எனவே அனைத்து மாணவர்களும் மனித நேயத்தை வளர்த்துக்கொண்டு சிறந்த குடிமகன்களாக வேண்டும் என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியில் முதன்மை கல்வி அலுவலர் திரு.த,ராஜேந்திரன், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திருமதி.சு.சிவகாமி, மாவட்ட மேலாளர் தாட்கோ திருமதி,மா,தா,செலின் ரீட்டா, பொன்னேரி மாவட்ட கல்வி அலுவலர் திரு,ஏ,கே.கங்காதரரெட்டி, தனி வட்டாட்சியர் (ஆதிந) திரு.கோ.இளங்கோவன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~